**வடகிழக்கு பருவமழை -2018 தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : முனைவர். இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப.,**

ந.க.பே.மே. 1697/2018 நாள்: 05.09.2018.

விழுப்புரம் மாவட்டத்தில் எதிர்வரும் 2018 வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் 30.08.2018 அன்று மாலை 04.00 மணியளவில் சம்மந்தப்பட்ட துறைவாரியான அலுவலர்களுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் **(District Co-ordination Committee Meeting)** கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் கீழ்க்காணும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1) மாவட்ட வருவாய் அலுவலர், விழுப்புரம்.
2) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம்.
3) சார் ஆட்சியர், திண்டிவனம், திருக்கோவிலூர்.
4) உதவி ஆட்சியர் (பயிற்சி), விழுப்புரம்.
5) துணை ஆட்சியர் (பயிற்சி), விழுப்புரம்.
6) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) விழுப்புரம்.
7) வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம்/கள்ளக்குறிச்சி.
8) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், விழுப்புரம்.
9) மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், விழுப்புரம்.
10) மாவட்ட வழங்கல் அலுவலர், விழுப்புரம்.
11) செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், விழுப்புரம்.
12) உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கள்ளக்குறிச்சி.
13) மாவட்ட சமூக நல அலுவலர், விழுப்புரம்.
14) கால்நடை மருத்துவ அலுவலர், திருக்கோவிலூர்.
15) உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், விழுப்புரம்.
16) கண்காணிப்பாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், விழுப்புரம்.
17) உதவி கோட்ட மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்.
18) துணை இயக்குநர், சுகாதார நலப்பணிகள், விழுப்புரம்/கள்ளக்குறிச்சி.

19) உதவி இயக்குநர், ஊராட்சிகள், விழுப்புரம்/கள்ளக்குறிச்சி.

20) கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, விழுப்புரம்/கள்ளக்குறிச்சி.

21) உதவி இயக்குநர், பேரூராட்சிகள், கடலூர்.

22) உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், விழுப்புரம்.

23) செயல் அலுவலர், மரக்காணம் பேரூராட்சி/ கோட்டக்குப்பம்.

24) வட்டார போக்குவரத்து அலுவலர், திண்டிவனம்/உளுந்தூர்பேட்டை/விழுப்புரம்.

25) உதவி பட்டு ஆய்வாளர், பட்டுவளர்ச்சித்துறை, விழுப்புரம்.

26) துணை இயக்குநர், வேளாண்மை, விழுப்புரம்.

27) உதவி தீயணைப்பு நிலைய அலுவலர், விழுப்புரம்.

28) உதவி செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, விழுப்புரம்.

29) துணை இயக்குநர், தோட்டக்கலைத்துறை, விழுப்புரம்.

30) துணை பதிவாளர், பொது விநியோகத்திட்டம், விழுப்புரம்.

31) உதவி செயற்பொறியாளர், கட்டிடங்கள், பொ.ப.து. திண்டிவனம்.

32) உதவி செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, விழுப்புரம்/கள்ளக்குறிச்சி.

33) அனைத்து காவல் துணை கண்காணிப்பாளர்கள், விழுப்புரம் மாவட்டம்.

34) நகராட்சி ஆணையர், விழுப்புரம்/திண்டிவனம்/கள்ளக்குறிச்சி.

35) அனைத்து வருவாய் வட்டாட்சியர்கள், விழுப்புரம் மாவட்டம்.

36) வட்டாட்சியர்(பேரிடர் மேலாண்மை) விழுப்புரம்.

வடகிழக்கு பருவமழையின் போது ஏற்படக்கூடிய புயல்/ கனமழை/வெள்ளம் ஆகியவற்றின் தாக்கத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு கீழ்க்கண்ட விவரப்படி விவாதித்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் 2018ம் ஆண்டிற்கு நாளது தேதிவரை பெய்திருக்க வேண்டிய சராசரி மழையளவு 300.89 மி.மீட்டருக்கு குறைவாக 190.70 மி.மீ அளவிற்கே மழை பெய்துள்ளது. நடப்பாண்டில் மழையளவு குறைவான அளவே பெய்திருந்தாலும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாத அளவிற்கு மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், எதிர்வரும் வடகிழக்கு பருவமழையின்போது கூடுதலாக மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ளும்பொருட்டு கடந்த ஆண்டைப் போலவே மாவட்ட அளவில், கோட்ட அளவில், வட்ட அளவில் மண்டல அலுவலர்கள் நியமனம் செய்யப்படும் எனவும்,

மாவட்டத்தில் மொத்தம் 170 பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் **(Vulnerable Areas)** கண்டறியப்பட்டுள்ளது எனவும், அவற்றில் **4- Highly Vulnerable, 13-Vulnerable, 25-Moderately Vulnerable, 128-Low Vulnerable** என்ற வகையில் கண்டறியப்பட்டு, அதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், முதல்பொறுப்பாளர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண்களை சரிபார்த்து மாற்றங்கள் ஏதேனும் செய்யப்பட வேண்டுமெனில் உடனடியாக மாற்றங்கள் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மாவட்டத்தில் பேரிடர் நிலைமையினை கண்காணிப்பதற்கு மாவட்ட அளவில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும் **(Early Warning, Search & Rescue, Shelter & Management, First Aid Team, Flood Pattrolling Team, Damage Assessment Team)**, அனைத்து வட்டாட்சியர்களும் தங்களது வட்டத்திற்கு குறுவட்ட வாரியாக பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களை கொண்டு (Interdepartmental Zonal Teams) மண்டல அளவில் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும், பாதிப்பு உள்ள பகுதிகளில் 10 நபர்கள் வீதம் ஆண் மற்றும் பெண் முதன்மை பொறுப்பாளர்கள் தேர்வு செய்து அவர்களின் தொலைபேசி எண்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மாவட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் கூட்டத்தின்போது அறிவுறுத்தப்பட்டது.

**<u>1.மாவட்ட பேரிடர் அவசர கால செயல்மையம் (DEOC)</u>**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட அவசர கால செயல்மையத்தில் (DEOC) 24 மணி நேரமும் சுழற்சி முறையில் (8 மணி நேரத்திற்கு ஒரு அலுவலர் என்ற முறையில்) அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர் எனவும், பேரிடர் காலங்களில் பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்ளும் வகையில் இலவச கட்டணமில்லா தொலைபேசி (1077) மற்றும் STD வசதியுடன் கூடிய தொலைபேசி (0146-223265) இயங்கி வருகிறது எனவும் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இவ்வசதி குறித்த விவரத்தினை நாளிதழ்களிலும்/ தொலைக்காட்சியிலும் விளம்பரம் செய்து பொது மக்களிடையே நன்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ள விபரம் தெரிவிக்கப்பட்டது.

**<u>2. பொதுப்பணித்துறை கட்டிடங்கள்:</u>**

பொதுப்பணித்துறையின் மூலம் புதியதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு புயல்பாதுகாப்பு மைய கட்டிடங்களில் (Multi Purpose Evacuation Shelters) அடிப்படை வசதிகள் அனைத்தும் உள்ளனவா என்பதை சம்மந்தப்பட்ட சார் ஆட்சியர்/ வருவாய் கோட்டாட்சியர்/ பொதுப்பணித்துறை அலுவலர்கள் ஆகியோருடன் கூட்டாக ஆய்வு

செய்து ஆய்வறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திடுமாறும், பள்ளிக் கட்டிடங்கள், சமுதாய கூடங்கள் குறித்த விவரத்தினையும் தயார் நிலையில் வைத்திருக்குமாறும் கூட்டத்தின்போது அறிவுறுத்தப்பட்டது.

3. பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு)

வடகிழக்கு பருவமழை காலங்களில் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் மூலமாக அதிகளவு மணல் நிரப்பிய பைகள் (Sand Bags and Casurina poles) மற்றும் தடுப்புக் கட்டைகள் தயார் நிலையில் இருப்பு வைத்துக்கொள்ளுமாறும், இருப்பு வைத்துள்ள இடங்கள் குறித்த விவரத்தினை மாவட்ட பேரிடர் மேலாண்மை அலுவலகத்திற்கு தெரிவித்திடவும், தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் மற்றும் அணைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

4. நெடுஞ்சாலைத்துறை:

புயல்/மழை/வெள்ள பாதிப்பின் போது சாலைகளில் மரங்கள் விழுதல், மின்கம்பிகள் அறுந்து விழுதல் போன்றவற்றை தடுக்கும் வகையில் தற்போழுதே பழுதடைந்துள்ள மின்கம்பங்கள் மற்றும் மரங்கள் போன்றவற்றை அகற்றிவிட்டு, புதிய மின்கம்பங்கள் நட வேண்டும் எனவும், புல்டோசர்கள், ஜேசிபி ஆகியவை தயார் நிலையிலும், அவற்றை இயக்குபவர்களின் தொலைபேசி எண்களையும் தயாராக வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

மேம்பாலங்கள் மற்றும் சிறுகுறு பாலங்களில் உள்ள புதர்களை அகற்றிடவும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும்,போதிய அளவு மரம் அறுக்கும் கருவிகளை தயார் நிலையில் வைத்திருப்பதுடன் அவற்றை பயன்படுத்த தெரிந்த நபர்களின் தொலைபேசி எண்களையும் வைத்திருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டது. சாலைகள் பழுதடைந்தால் அதனை உடனே சரிசெய்ய அவசர கால பொருட்களை வைத்திருப்பதுடன் செய்து முடிக்க தகுதியான ஒப்பந்ததாரர்கள் எண்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

5. உணவுப்பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை:

நியாய விலைக் கடைகளில் போதிய அளவு அத்தியாவசிய உணவுப் பொருட்களை இருப்பு வைத்திடவும், பெட்ரோல், டீசல், எல்.பி.ஜி சில்லரை விற்பனை மையங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளதா? என ஆய்வு செய்து

உரிய நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் தாழ்வான பகுதிகளில் உள்ள கடைகளை வேறு இடத்திற்கு மாற்றவும், மழைக்காலங்களில் மழைநீர் உள்புகாதவாறு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

6. **ஊரக வளர்ச்சித்துறை:**

ஊரக வளர்ச்சித்துறையினர் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளின் கரைகளை பலப்படுத்திடவும், பராமரிப்புப் பணி மேற்கொள்ளவும், போதுமான அளவு மணல் நிரப்பிய பைகள், தடுப்பு கட்டைகள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்களில் இருப்பு வைத்திடுமாறும் அறிவுறுத்தப்பட்டது. முணல் மூட்டைகள் இருப்பு வைத்துள்ள விவரங்களை மாவட்ட பேரிடர் மேலாண்மை பிரிவிற்கு தெரிவித்திட வேண்டியது. மேலும் ஏரிகளில் வண்டல் மண் எடுத்தமையால் உருவான பள்ளங்களினால் ஏரி கரைகள் பாதிப்பிற்கு உள்ளாகி இருந்தாலும், கரைகளை பலப்படுத்திட வேண்டும் எனவும், வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது.

7) **தீயணைப்புத்துறை:**

தீயணைப்புத்துறை மற்றும் மீட்புத்துறையினரிடம் உள்ள மீட்பு கருவிகளை Rubber Boats, Life buoys, Life Jackets போன்ற கருவிகளை பாதிப்புள்ளாகும் பகுதிகளில் கூடுதலாக தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தங்களை தற்காத்து கொள்ளும் வகையில் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு செயல்முறை விளக்கம் (Mockdrill) நடத்தி புகைப்படத்துடன் கூடிய அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

8) **சுகாதாரத்துறை:**

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான அளவு மருந்து பொருட்களை இருப்பு வைத்திடவும், மருத்துவமனையில் ஜெனரேட்டர்கள், மருத்துவ வாகனங்கள் மற்றும் தேவையான படுக்கைகள் மற்றம் இதர உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

9) **கால்நடை பராமரிப்புத்துறை:**

மழைக்காலங்களில் கால்நடைகளுக்கு தேவையான மருந்துப் பொருட்களை இருப்பு வைத்திடவும், கால்நடை இழப்பு ஏற்படும் இனங்களில் காலதாமதின்றி உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு ஏதுவாக பாதிக்கப்பட்ட கால்நடையுடன் உரிமையாளர் புகைப்படம் எடுத்து அனுப்ப வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

10. காவல்துறை:

மழைக்காலங்களில் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் (Vulneabel Places) ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அலுவலர்களுடன் காவல்துறை ஆய்வாளர்கள் ஒருங்கிணைந்து செயல்படுமாறும், VHF/HF சாதனங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், தற்போது வருவாய்த்துறையில் அனைத்து வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வாகனங்களுக்கும் புதியதாக VHF Sets சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள VHF Sets சாதனங்கள் குறைபாடுகள் சரிசெய்பவர்கள் குறித்த விவரங்களை வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு தெரிவித்திடுமாறு அறிவுறுத்தப்பட்டது.

11. மின்சார வாரியத்துறை:

மின்சார ஒயர்கள் நல்ல நிலையில் உள்ளதா என ஆய்வு செய்தும், பழுதடைந்துள்ள ஒயர்கள் மற்றும் மின்கம்பங்களை பழுது நீக்கம் செய்திடவும், மின்மாற்றிகள் மற்றும் மின்கம்பிகள் ஆகியவற்றை கூடுதலாக போதிய அளவு இருப்பு வைத்திடவும் அறிவுறுத்தப்பட்டது.

பொது:

- அனைத்து துறை அலுவலர்களும் தங்களிடமுள்ள ஜெனரேட்டர்கள் நல்ல நிலையில் உள்ளதா எனவும், Invertor இயங்கும் வகையில் தயார் நிலையில் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்பட்டது.
- தனியாரிடமுள்ள ஆம்புலென்ஸ் விவரங்களையும் அவற்றை இயக்குபவரின் தொலைபேசி எண்ணை வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- நியமனம் செய்யப்பட்டுள்ள மண்டல அலுவலர்கள் பல்வேறு துறை சார்ந்த மண்டல அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்திடவும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்திட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.
- மழைக்காலங்களில் கால்நடைகளுக்கு நோய் ஏற்படா வண்ணம் தடுக்க முன்னெச்சரிக்கையாக மருந்துகள் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- மழை/ வெள்ளம்/ புயல் போன்ற பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு உதவும் வகையில் பேருந்து வசதிகளை ஏற்படுத்தி தரவும், பழுதுள்ள வாகனங்களை

உடனடியாக பழுது நீக்கம் செய்து நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

- அனைவருக்கும் குடிநீர் விநியோகம் தங்கு தடையின்றி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- மழை/ வெள்ளம்/ புயல் போன்ற பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு உதவும் வகையில் பாதுகாப்பு மையங்களின் Key சம்மந்தப்பட்ட பஞ்சாயத்து அலுவலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பில் இருக்க வேண்டும்.
- பள்ளிக்கட்டிடங்களின் சாவிகளை சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர் வசமும், மற்றொரு சாவியினை கிராம நிர்வாக அலுவலர் வசமும் தயார் நிலையில் வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.
- மழைக்காலங்களில் கிடைக்கக் கூடிய மழைநீர் ஊருணி, குட்டை, போன்றவற்றை சென்றடையும் வகையில் அதன் வழித்தடங்கள் தூர்வாரப்பட்டு சரிசெய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- மழை/ வெள்ளம்/ புயல் போன்ற பேரிடர் காலங்களில் பொதுமக்கள் தங்க வைக்கப்படும் சமுதாயகூடம், திருமண மண்டபங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் குடிநீர், கழிப்பறை வசதி, ஆகியவை உள்ளனவா என ஆய்வு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களும் அடங்கல் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் வட்டாட்சியர் ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டது.
- அனைத்து வட்டாட்சியர்களும் கையடக்க நோட்டில் Mini Handbook தயார் செய்து அனைத்துத்துறை தொலைபேசி எண்கள் மற்றும் முதன்மை பொறுப்பாளர்களின் தொலைபேசி எண்கள், ஓட்டுநர் தொலைபேசி எண்கள், ஆகியவற்றை பதிவு செய்து வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- காவல்துறை வடகிழக்கு பருவமழைக் காலங்களில் கடலோர காவல்படை தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.
- 170 பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் வசிக்கும் அனைத்து விவசாயிகளையும் பசல் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்து காப்பீடு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- விழுப்புரம் மாவட்டத்தில் இயங்கி வரும் மழைமாணி நிலையங்களை சம்பந்தப்பட்ட சார் ஆட்சியர்கள்/ வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள்

உடனடியாக ஆய்வு செய்து அறிக்கை அனுப்பிடவும், அப்பகுதியினை துாய்மையாக வைத்திடவும் அறிவுறுத்தப்பட்டது.

- அனைத்து வட்டாட்சியர்களும் தங்களது வட்டத்தில் உள்ள முதன்மை பொறுப்பாளர்களுக்கு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் கூட்டம் நடத்திட உரிய அறிவுரைகள் வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- 2005 முதல் 2017 வரையிலான பல்வேறு பேரிடர் கால நிகழ்வுகளின் போது மற்றும் மழைக்காலங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் அவற்றின் போது எடுத்த நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை 05.09.2018 தேதிக்குள் அனைத்துத்துறை அலுவலர்களும் தவறாமல் மாவட்ட ஆட்சியர் பேரிடர் மேலாண்மை பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.
- அனைத்து வட்டாட்சியர்களும் மழைப்புள்ளி விவரம், மனித உயிரிழப்பு/ கால்நடை உயிரிழப்பு மற்றும் குடிசை சேத விவரங்களை காலதாமதமின்றி உடனுக்குடன் மாவட்ட ஆட்சியர் முகாமிற்கு அலுவலகத்திற்கும், பேரிடர் மேலாண்மை பிரிவிற்கும் அனுப்பி வைத்திட அறிவுறுத்தப்பட்டது.
- அனைத்து வட்டாட்சியர்களும் தங்களது வட்டத்திற்குரிய வட்ட அளவிலான பேரிடர் மேலாண்மைத் திட்ட அறிக்கையினை 05.09.2018க்குள் பேரிடர் மேலாண்மைப் பிரிவில் சமர்பித்திடுமாறு அறிவுறுத்தப்பட்டது.

வடகிழக்கு பருவமழை 2018 தொடர்பாக அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் காலதாமதமின்றி உடனடியாக மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. பேரிடர் காலங்களில் அனைத்து துறை அலுவலர்களும் எவ்வித சுணக்கமுமின்றி விரைவாகவும், முழுமையாகவும் பணிகளை செய்து முடித்திட உரிய ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

ஒம்./-இல.சுப்பிரமணியன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
விழுப்புரம்.

//உ.ந.உ.ப.//

வட்டாட்சியர்(பே.மே.)

05/09/2018

பெறுநர்:
சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள், விழுப்புரம் மாவட்டம்.
நகல்: கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நேர்முக எழுத்தர்கள்.